**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.466/2020 –** P.W.9

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. செந்தில்குமார் | Father's Name. ராமச்சந்திரன் |
| Village : கரூர் | Age: 56 |
| Date :06.07.2026 | தொழில் : காவல் துணை கண்காணிப்பாளர் |

நம்பர்: 9498164765

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6th **day of July 2026.**

Signature of Witness

**Tmt. S. Revathi (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6th **day of July 2026.**

Signature of Interpreter

**( எதிரி ஆஜரில்லை. அவருக்காக அவரது தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜராக அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்த குவிமுச.பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்போது, கரூர் மாவட்ட குற்றப்பிரிவில், காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 06.10.2018ம் தேதி நாகப்பட்டினம் நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த நான், நாகூர் காவல் நிலையத்தின் வட்ட காவல் ஆய்வாளராகவும் கூடுதல்

பொறுப்பு வகித்துவந்தேன். அன்று காவல் நிலையத்தில் பணியில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. மோகன் என்பவர் பதிவு செய்துவைத்திருந்த நாகூர் காவல் நிலைய குற்ற எண்.344/2018 இதச பிரிவுகள் 279, 304(எ) என்ற வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக பெற்றுக்கொண்டேன்.

மறுநாள் 07.10.2018ம் தேதி காலை 06.00 மணியளவில் சம்பவ இடம் சென்று, அங்கிருந்த சாட்சிகளான ஸ்ரீதர் மற்றும் வெங்கடேசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசரில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பார்வை மகசர் **அதசாஆ.3**. மாதிரி வரைபடம் **அதசாஆ.4**.

கடந்த 07.10.2018ம் தேதி அன்றே காலை சுமார் 11.00 மணிமுதல் பகல் 12.00 மணிவரை, இந்த விபத்தில் இறந்துபோன வசந்தா பெண் வயது 50 க/பெ. தர்மலிங்கம் என்பவரின் பிரேதத்தின்மீது திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். பிரேத விசாரணை அறிக்கையில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அதசாஆ.5**. பிரேத விசாரணை அறிக்கை சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி வசந்தாவின் பிரேதத்தினை சடலகூராய்வு செய்யவேண்டி தக்க வேண்டுகோள் கடிதத்தினை காவலர் 981 திரு.முருகன் என்பவர் மூலம் மேற்படி மருத்துவமனை மருத்துவரிடம் ஒப்படைத்தேன். பிரேத விசாரணைக்கு பின்னர் எனது உத்தரவுப்படி நல்லடக்கம் செய்யவேண்டி வசந்தாவின் பிரேதத்தினை அவரது உறவினர் வசம் ஒப்படைக்கப்பட்டது.

தொடர்ந்து கடந்த 15.10.2018ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் நிலையம் ஆஜராகி இருந்த இவ்வழக்கின் எதிரியை காரணங்கள் கூறி நாகூர் காவல் நிலையத்தில் வைத்து கைது செய்தேன். அன்று இவ்வழக்கின் எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் மேற்படி காவல் நிலையத்தின் ஆய்வாளர் திரு. இராதாகிருஷ்ணன் என்பவர் பணிக்கு வந்ததால் வழக்கு கோப்பினை அவரிடம் ஒப்படைத்தேன்.

தொடர் புலன் விசாரணைக்காக இவ்வழக்கு கோப்பினை எடுத்துக்கொண்ட மேற்படி காவல் ஆய்வாளர் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட PY 02 Q 5304 என்ற எமஹா இருசக்கர வாகனத்தை கடந்த 25.10.2018ம் தேதி தக்க வேண்டுகோள் கடிதத்துடன் நாகப்பட்டினம் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்விற்காக உட்படுத்தியுள்ளார். அது சம்மந்தமாக மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கருப்புசாமி என்பவரை அன்றே மேற்படி காவல் ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அப்போது மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் இந்த விபத்தானது மேற்படி இருசக்கர வாகனத்தின் இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என கருத்து தெரிவித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை வழங்கியுள்ளார். அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அதசாஆ.6**.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் மோகன் என்பவரை மேற்படி ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

இந்த விபத்தில் இறந்துபோன வசந்தாவின் பிரேதத்தின் மீது சடல கூராய்வு மேற்கொண்ட திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவர்

திரு. அருண்குமார் என்பவரை மேற்படி காவல் ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் மற்றும் அவர் வழங்கிய சடலகூராய்வு அறிக்கையை பெற்றுள்ளார். அந்த சடலகூராய்வு அறிக்கை **அதசாஆ.7**.

வழக்கின் புலன் விசாரணை முடித்து இவ்வழக்கின் குற்ற அறிக்கையை தாக்கல் செய்துள்ளார். மேற்படி காவல் ஆய்வாளர் தொடர் புலன் விசாரணை மேற்கொண்டது சம்மந்தமாக இன்று இவ்வழக்கு ஆவணங்களை பார்த்து தெரிந்து கொண்டேன். அதன் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளேன்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**.

இந்த விபத்தில் இறந்துபோன வசந்தா சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டாரா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் காயம்பட்டவரை முதலில் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கும், பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கும் சிகிச்சைக்காக கொண்டுபோய் சேர்க்கப்பட்டுள்ளார். திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மாலை சுமார் 6.20 மணியளவில் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார். மேற்படி மருத்துவமனைகளில் மேற்படி வசந்தாவை யார் சிகிச்சைக்காக கொண்டுபோய் சேர்த்தார்கள் என்ற விபரம் அறியவும், அந்த சமயத்தில் அவர் எப்படி இருந்தார், அவருக்கு என்னென்ன வெளிப்புற காயங்கள் இருந்தது என்பவைகளை அறியவும், ஏதேனும் விபத்து பதிவேட்டு ஆவணங்களை பெற்று இந்த வழக்கு சம்மந்தமாக ஆஜர் செய்துள்ளோமா என்றால் இல்லை. குறைந்த பட்சம் மேற்படி மருத்துவமனைகளில் மேற்படி வசந்தாவை பார்வையிட்டு, பரிசோதனை செய்த மருத்துவர்களையாவது நானோ அல்லது தொடர் புலன் விசாரணை மேற்கொண்ட காவல் ஆய்வாளரோ

விசாரணை செய்து இவ்வழக்கில் சாட்சிகளாக காட்டியுள்ளோமா என்றால் இல்லை.

இந்த விபத்தில் இறந்துபோன வசந்தாவை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் பார்த்த சமயத்தில் மேற்படி வசந்தா தலைமுடி அறுந்த நிலையில் அதற்கான தடயங்களுடன் காணப்பட்டாரா என்றால் இல்லை. அசா.1 ராமன் மற்றும் அசா.2 ரவீந்தர் ஆகிய இருவரும் இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன வசந்தாவின் மகன்கள் மற்றும் அவர்கள் இந்த விபத்தினை கண்ணுற்ற சாட்சிகள் இல்லை என்று சொன்னால் சரிதான். அவர்களை நான் விசாரித்தபோது அவர்களின் குவிமுசா பிரிவு 161(3)னின் படியான வாக்குமூலத்தில், **"அவர்களின் அம்மா வசந்தாவின் தலைமுடி அவர்மீது மோதிய இருசக்கர வாகனத்தில் மாட்டிய பின்னரும், அந்த இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் வண்டியை நிறுத்தாமல் சிறிது தூரம் தர தரவென்று இழுத்து சென்றதாகவும், உடனடியாக அங்கிருந்தவர்கள் அதைப்பார்த்து அந்த வண்டி சக்கரத்தில் மாட்டியிருந்த அவர்களின் அம்மாவின் தலை முடியை கட் செய்ததாகவும், அங்கிருந்தார்கள் கூறியதாகவும், சம்பவ இடம் சென்று அவர்கள் அவர் அம்மாவை தலை முடி அறுந்த நிலையில் பார்த்ததாக,"** சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை. மேற்கண்டவாறு சம்பவம் நடந்ததாக எனது புலன் விசாரணையில் தெரியவந்ததா என்றால் இல்லை. நான் புலன் விசாரணை மேற்கொண்ட வகையில், சம்பவத்தை கண்ணுற்றதாக அசா.3 சந்துரு, அசா.4 சேகர், அசா.5 சுஜை, அசா.6 வீரச்செல்வன் ஆகியோர்களை சாட்சிகளாக காட்டியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அவர்கள் என்னிடம் அளித்த குவிமுச பிரிவு 161(3)னின் படியான வாக்குமூலங்களில், **"இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன வசந்தா என்ற ஓர் அம்மாதான் திடீரென சாலையின் குறுக்கே வந்தபோது இந்த விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனம்மோதி**

**அடிப்பட்டு கீழேவிழுந்துவிட்டார் என சொல்லியுள்ளார்கள்"** என்று சொன்னால் சரிதான். அவ்வாறான சூழ்நிலையில் இந்த விபத்தில் காயம்பட்டு இறந்துபோன வசந்தா சாலையின் இடதுபுற ஓரமாக சென்றதாகவும், அவர் மீது இருசக்கர வாகனம் மோதியதாகவும், எதன் அடிப்படையில் இவ்வழக்கின் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் அதுப்பற்றி என்னால் கூற இயலாது. காவல் ஆய்வாளர் இராதாகிருஷ்ணன் என்பவர்தான் குற்ற அறிக்கையை தாக்கல் செய்தார். அதனால் அதுப்பற்றிய விபரம் அருக்குதான் தெரியும்.

இவ்வழக்கின் பார்வை மகசர், சாட்கிளின் குவிமுச பிரிவு 161(3)னின் படியான வாக்குமூலங்கள் ஆகியவைகள் அனைத்தும் நிலைய கணினியில் வைத்து யாரால் தயார் செய்யப்பட்டது என்றால் CCTNS பராமரிக்கும் காவலர் தயார் செய்துள்ளார். அந்த ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கின் குற்ற அறிக்கையுடன் காலதாமதமாகத்தான் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கின் புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையைகூட நான்கு நாட்கள் கழித்து கடந்த 10.10.2018ம் தேதிதான் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். கடந்த 06.10.2018ம் தேதி இவ்வழக்கு கோபினை புலன் விசாரணைக்காக பெற்றுக்கொண்ட நான் கடந்த 15.10.2018ம் தேதிக்கு பின்னர்தான் காவல் ஆய்வாளர் இராதாகிருஷ்ணனிடம் இவ்வழக்கு கோப்பினை மறு புலன் விசாரணைக்கு ஒப்படைத்தேன் என்று சொன்னால் சரிதான்.

இதற்கிடையில் கடந்த 06.10.2018ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் மோகனையும், கடந்த 07.10.2018ம் தேதி மருத்துவர் திரு. அருண்குமாரையும் காவல் ஆய்வாளர் இராதாகிருஷ்ணன் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு

செய்தததுபோல அவர்களின் சாட்சிய வாக்குமூலங்கள் உருவாக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 1 முதல் 9 வரையிலான பட்டியல் சாட்சகளை நான் எந்த தேதியில் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்று அவர்களின் குவிமுச பிரிவு 161(3)ன் படியான வாக்குமூலங்களில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

சம்பவ இடமானது எங்கள் காவல் நிலையத்தில் இருந்து 500 மீட்டர் தூரத்திற்குள்தான் நடைபெற்றுள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவ இடம் பட்டம் பகலில், கடைகள், வீடுகள் நிறைந்த நாகூரில் இருந்து நாகப்பட்டினம் செல்லும் மெயின் ரோட்டில் நடைபெற்றுள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவம் குறித்து உடனடியாக தகவல் அறிந்து நாகூர் காவல் நிலைய போலிசார் போக்குவரத்தை சரிசெய்யவும், காயம்பட்ட நபரை மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கவும் சம்பவ இடம் சென்றுவிட்டனர் என்று சொன்னால் சரிதான். அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

இந்த விபத்தானது வசந்தா என்ற வயதான பெண்மணி திடீரென மெயின் ரோட்டில் குறுக்கே வந்ததால்தான் ஏற்பட்டது என்றும், அந்த விபரம் சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லப்படும் சாட்சிகளை நான் விசாரித்த வகையில் தெரியவந்திருந்தும், இறந்த நபரின் குடும்பத்திற்கு இழப்பீடு பெற்றுத்தரவேண்டி, விபத்து குறித்து ஏற்கனவே கிடைக்கப்பெற்ற உண்மை தகவலை மறைத்து பின்னிட்டு இவ்வழக்கின் புகார் உள்ளிட்ட ஆவணங்கள் தவறாக உருவாக்கப்பட்டு, எதிரிக்கு எதிராக தவறான குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.07.06 17:53:56 +0530